செ. வெ. எண். 387 நாள். 4.7.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் 4.7.2012 அன்று நெடுஞ்சாலைத்துறையில் நடைபெற்றுவரும் பணிகள் குறித்து துறையின் செயலாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்களுடன் ஆய்வினை மேற்கொண்டார்.

நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு, திட்டம் அலகு, நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு, தேசிய நெடுஞ்சாலைகள் அலகு மற்றும் சென்னை மாநகர அலகு ஆகியவற்றில் தற்போது நடைபெற்றுவரும் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், நடப்பாண்டில் (2012–13) செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள வேலைகள் பற்றியும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கினங்க தற்போது நடைபெற்றுவரும் சாலைப்பணி மற்றும் ஆற்றுப்பாலங்கள், ரயில்வே மேம்பாலங்கள், சுற்றுச்சாலை, வட்டச்சாலை மற்றும் புறவழிச்சாலை ஆகிய பணிகளை துரிதப்படுத்தி சிறந்த முறையில் செய்யப்படவேண்டும் என்றும், புறவழிச்சாலை மற்றும் பாலப் பணிகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளை காலதாமதமின்றி விரைந்து செயல்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

நெஞ்சாலைத்துறைக்கு முதல் காலாண்டில் ஒதுக்கப்பட்ட ரூ.750 கோடியில் ரூ.621 கோடி (83 சதவீதம்) செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்று காலாண்டுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.3002 கோடியில் நெடுஞ்சாலைத்துறையில் நடைபெற்றுவரும் அனைத்து பணிகளையும் விரைவில் முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

சாலைகளை சிறந்த தரத்துடன் அமைக்க வேண்டும் என்றும் சாலைப்பணிகள் நடைபெறும்போது உரிய அதிகாரிகளால் கண்காணிக்கப் படவேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

**வெளியீடு: –**

**இயக்குநர்**, செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.